**செய்தி வெளியீடு எண்: 334** **நாள்: 12.06.2019**

# செய்தி வெளியீடு

## மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

### என் வேலை,எனது கௌரவம் ;

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ், செயல்படும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை கிண்டியில் பிப்ரவரி 22, 2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, ஆணையர் அவர்கள் இம்மையத்தின் ஆணையர் மற்றும் முதன்மை நிர்வாக அலுவலராவார். வேலைநாடும் இளைஞர்கள் தங்களுக்கு உகந்த தொழில்நெறியை தெரிவு செய்வதற்கு உறுதுணையாக விளங்குவதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக இத்தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உள அளவை சோதனைகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்பு முகாம்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனைகள் வழங்குவது என்பது போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் குறிக்கோள்கள்:**

- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் பணி பெறும் திறனை உயர்த்துவதற்காக வேலைநாடுநர்களையும், தொழில் நிறுவனங்களையும், வேலையளிப்போரையும் இணையதளம் மூலம் ஒருங்கிணைக்கும் ஒரு வழிகாட்டும் முகமையாக செயல்படுதல்.
- மாணவர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்தி, திறன் பெற்ற மனித வளங்களாக உருவாகுவதற்கு உதவுதல்.
- வேலைவாய்ப்பு பற்றிய ஆலோசனை மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்குதல் மற்றும் இளைஞர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையைத் தேர்வுசெய்ய தொழில்நெறி வழிகாட்டுதல்.
- அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்து தனியார் நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடத்துதல் மற்றும் வெளிப்படையான பணிநியமன தேர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- திறன் மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்கான உரிய பணியில் இளைஞர்களை பணியமர்த்துதல்.
- இளைஞர்களிடையே காணப்படும் தொழில் முனைவு ஆற்றலை ஊக்குவித்தல் மற்றும் அதனில் ஈடுபடுத்திடல்.

**மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள்:**

- ➢ தனியார் துறையில் பணிபெறும் பொருட்டு இம்மையத்திற்கான வளைதளத்தில் வேலைநாடுநர்கள் தங்களது சான்றுகளை பதிவேற்றலாம். இஃது வேலை அளிப்போரால் நேரடியாக அறியப்பட முடியும்.

இதன்மூலம் வேலை நாடுநர்கள் தனியார் துறையில் பணியிடங்களை பெறுவதற்கான தொடர்ச்சியான வாய்ப்புகளை பெறலாம்.

- மையத்தில் ஒவ்வொரு நாளும் வேலையளிப்போர் –வேலை நாடுநர் சந்திப்பு நடத்தப்படும்.
- வேலைவாய்ப்பு முகாம்கள், பயிற்சி வகுப்புகள் மற்றும் மையத்தின் இதர நடவடிக்கைகள் குறித்து வேலைநாடுநர்களுக்கு கைபேசி வழியாக குறுஞ்செய்திகள் அனுப்பப்படும்.
- மையத்தில் பணியாற்றும் ஆண் மற்றும் பெண் ஆலோசகர்கள் மூலம் திறன் மதிப்பீடு, மனோவியல் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலும், மாணவர்களின்அறிவு திறன், திறமை, கல்வி மதிப்பெண் மற்றும் அவர்களுக்கான விருப்பத்தின் அடிப்படையிலும் தொழில் மற்றும் மேல்படிப்பினை தேர்வு செய்ய வழிகாட்டுதல் .
- மாநில மற்றும் மத்திய குடிமைப்பணிகளுக்கான போட்டித்தேர்வுகளுக்கு மாதிரித் தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் ஆகியவற்றுடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- இளைஞர்களின் திறன் மற்றும் நாட்டத்தினை மதிப்பீடு செய்தல் தொடர்பில் உளவியல் மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்குதல்.

மேற்கண்ட பணிகளை சிறப்புற நிறைவேற்றுவதற்கென உயர்தர வசதிகளையும், அதற்கான கருவிகளையும் கொண்டுள்ளது மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம். விருப்பமுடைய பணிநாடுநர்கள் இவ்வலுவலகத்தின் சேவைகளை கீழ்காணும் முகவரியில் அனைத்து அரசு வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை பயன்படுத்திக்கொள்ளலாம்.

முகவரி: STATE CAREER GUIDANCE CENTRE
A-28, 1st floor, TANSI CORPORATE HEAD QUARTERS.
THIRU.VI.KA.INDUSTRIAL ESTATE,
GUINDY, CHENNAI – 600 032
PHONE : 044-22500134 / 044-29530134
EMAIL ID : statecareercentre@gmail.com

இவ்வாறாக மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஒருவரது இயல்திறனும், உள்ளுறை திறமையும் கண்டறியப்பட்டு உரிய தொழில்நெறி வழிகாட்டல் வழங்கப்பட்டு அதற்கேற்ப அவரது வாழ்வை வடிவமைப்பதற்கான ஆலோசனையும், உதவியும் வழங்கப்படும். மொத்தத்தில் இளைஞர்களின் சுயத்தை அறிவதற்கும், ஒளிமயமான எதிர்காலத்தை கட்டமைக்கவும் இவ்வலுவலகம் உற்றதுணையாக விளங்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

எனவே, வேலைநாடும் இளைஞர்கள் இம்மையத்தின் சேவைகளை பெற்று பயனடையுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**